ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 30.01.2015 |

## 2015 சனவரியில் பணவீக்கம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டவாறான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட மாற்றங்களின் மூலம் அளவிடப்பட்டவாறான பணவீக்கம் (2006/07 = 100) ஆண்டுச் சராசரி அடிப்படையில், 2014 திசெம்பரில் பதிவு செய்யப்பட்ட 2.1 சதவீதத்திலிருந்து 2015 சனவரியில் 3.2 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. இது உணவு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாகும். ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் 2014 திசெம்பரில் பதிவு செய்யப்பட்ட 3.3 சதவீதத்திலிருந்து 2015 சனவரியில் 3.2 சதவீதத்திற்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்துள்ளது.



கொ.நு.விலைச் சுட்டெண்ணின் மாதாந்த சதவீத மாற்றம் 2015 சனவரியில் 1.7 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தமைக்கு உடன் உணவுப்பொருட்களின் விலை அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். குறிப்பாக, அனைத்துக் காய்கறி வகைகள், பச்சை மிளகாய், பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், உருளைக்கிழங்கு, முட்டை மற்றும் தேங்காய் என்பனவற்றின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தன. உணவல்லா வகையினிடையே, ஆடை மற்றும் காலணி; பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம்; கல்வி மற்றும் பல்வகைப் பொருட்கள் மற்றும் பணிகள் ஆகிய துணை வகைகளின் சராசரி விலைகளில் அதிகரிப்பு பதிவு செய்யப்பட்ட வேளையில், தளபாடம், வீட்டு உபயோகப்பொருட்கள் மற்றும் வழமையான வீட்டுப்பேணல்; நலன் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் ஆகிய துணை வகைகள் இம்மாத காலப்பகுதியில் மாற்றமடையாது காணப்பட்டன. இருப்பினும் எரிபொருள் விலைகள், வீடமைப்பு, நீர், மின், வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள்; மற்றும் போக்குவரத்து ஆகிய துணைத் துறைகளின் சராசரி விலைகள் வீழ்ச்சியடைந்தன. இவ்வபிவிருத்திகளின் விளைவாக உணவல்லா வகையின் சராசரி விலைகள் ஒட்டுமொத்த அடிப்படையில் வீழ்ச்சியடைந்தன.

பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கத்தினைக் குறிக்கும் மையப் பணவீக்கம் 2015 சனவரியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2014 திசெம்பரின் 3.2 சதவீதத்திலிருந்து 2.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2015 சனவரி காலப்பகுதியில் ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் 2014 திசெம்பரில் பதிவு செய்யப்பட்ட 3.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 3.4 சதவீதமாகக் காணப்பட்டது.